ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2182/32 - 2020 ජූලි මස 01 වැනි බදාදා - 2020.07.01

*2182/32 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) **7 ஆம் பிரிவுடன்** சேர்த்து வாசிக்கப்படும் **29 ஆம் பிரிவின்** கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்*

*சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2020, ஏப்பிறல் 8 ஆந் திகதியிடப்பட்ட 2170/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட **"சிறப்பு வைப்புக் கணக்குகள்"** மீது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு மேலதிகமானது.*

*1. 2020, சனவரி 01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த, சிறப்பு வைப்புக் கணக்கினைத் திறப்பதற்கு தகைமையுடைய எவரேனும் ஆள் அத்தகைய ஆள் மூலம் சட்டமுறையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு பின்வரும் முறைகளில் இலங்கையினுள் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலிருந்து **2020, ஏப்பிறல் 08 ஆந் திகதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர்** இலங்கையிலுள்ள எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறப்பதற்கு தகைமையுடையவராவார் :*

*(அ) 2017, நவெம்பர் 17 ஆந் திகதியிடப்பட்ட 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறு சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளையின் நியதிகளின் பிரகாரம் வருகை தந்த தளத்தில் சுங்கத் திணைக்களத்திற்குச் செய்யப்பட்ட வெளிப்படுத்தலொன்றின் மீது.*

*(ஆ) அத்தகைய வெளிநாட்டுச் செலாவணியின் தொகை ஐ. அ. டொலர் 15,000 அல்லது அதற்குச் சமமான எவையேனும் பெயர் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணய தொகையொன்றுக்குச் சமனாக அல்லது குறைவாக இருக்குமிடத்து சிறப்பு வைப்புக் கணக்கு எந்த அதிகாரம்பெற்ற வணிகரிடம் திறக்கப்படவுள்ளதோ அந்த வணிகருடனான பொருத்தமான வெளிப்படுத்தல் ஒன்றின் மீது.*

1A - PG 5043 — 542 (2020/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*2. சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றின் மூலம் அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைகள் வரை மற்றும் அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, நிதியங்களின் மூலம் பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கான வெளிப்படுத்தலுக்குட்பட்டு வெளிநாட்டு நாணயத்தினை தனது உடமையில் வைத்திருக்கின்ற இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற எவரேனும் ஆள், உடமையில் வைத்திருக்கின்ற அத்தகைய வெளிநாட்டு நாணயத்திலிருந்து* ***2020, ஏப்பிறல் 8 ஆந் திகதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர்*** *இலங்கையிலுள்ள எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறப்பதற்குத் தகைமையுடையவராவார்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.*

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, யூலை 01.*

*07-436*

*இலங்கை அரசாங்கத அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*